

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (31.01.2026) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலைப்பட்டி திரு இருதய மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து முகாமின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து மருத்துவம் சார்ந்த நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகர நல அலுவலர் சுபாஷ் காந்தி, மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.குமாரவேல், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குனர் கோபிநாத், மண்டல தலைவர் மதிவாணன், அரசு மருத்துவர்கள், பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலன் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைப்படி திருவள்ளூரில் உள்ள மேற்கு மாவட்ட கழக அலுவலகம் எதிரில் தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரை மற்றும் கழக அரசு செய்த சாதனைகளை விளக்கி ஒலிபெருக்கி ஆட்டோவை மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஓட்டிச் சென்று பரப்புரை மேற்கொண்டார் அருகில் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் உள்ளனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன், எஸ்.கே.பி.கருணா, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் துவக்கி வைக்கின்றனர் !

# கழக பொறியாளர் அணி சார்பில் தமிழ்நாடு ஸ்டேட் லெவல் கராத்தே சிலம்பம் சாம்பியன்ஷிப் 2026!

## சி.பிரதீப் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்கின்றனர்!

காஞ்சிபுரம், பிப்.1

கழக மாநில பொறியாளர் அணி சார்பில்,துணைச் செயலாளர் சி.பிரதீப் ஏற்பாட்டில் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்கும் தமிழ்நாடு ஸ்டேட் லெவல் கராத்தே & சிலம்பம் சாம்பியன்ஷிப் 2026 இன்று நடைபெறுகிறது.

அமைச்சர் தா.மோ அன்பரசன், எஸ்.கே.பி. கருணா, எஸ்.ஆர்.எல். இதயவர்மன் பங்கேற்கிறார்கள்.

காஞ்சி வடக்கு மாவட்டம்,கழக மாநில பொறியாளர் அணி மற்றும் ஜப்பான் கெயுரியு கராத்தே டூ தமிழ்நாடு, SMAA ஸ்கை மார்ட்டில் ஆர்ட்ஸ் அகாடமி இணைந்து நடத்தும் தமிழ்நாடு ஸ்டேட் லெவல் கராத்தே & சிலம்பம் சாம்பியன்ஷிப் 2026

காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் தை மாதம் முழுவதும் விளையாட்டுப் போட்டி நடத்த தந்த ஆலோசனைப்படி இன்று (1.2.2026 ஞாயிற்றுக் கிழமை ) காலை 9 மணிக்கு திருப்போரூர் வடக்கு ஒன்றியம் மேலக்கோட்டையூரில் அமைந்துள்ள தமிழ்நாடு பிசிகல் எஜுகேஷன் அண்ட் ஸ்போஸ்ட் யுனிவர்சிட்டியில் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்து பங்கேற்கும் கராத்தே மற்றும் சிலம்பம் போட்டி நடைபெறுகிறது.

கழக மாநில பொறியாளர் அணி சார்பில் நடைபெறும் இந்த விழாவை ஏற்பாடு செய்த பொறியாளர் அணியின் மாநில துணைச் செயலாளர் முனைவர் சி.பிரதீப் வரவேற்புரை ஆற்றுகிறார்.

விழாவை குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்து தொடங்கி வைப்பவர்கள் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர்,சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், எஸ்.கே.பி கல்வி குழு நிறுவனங்களின் தலைவரும் கழக மாநில பொறியாளர் அணியின் மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி கருணா, திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் ஒன்றிய பெருந்தலைவரும் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் ஆகியோர்கள் பங்கேற்று தொடங்கி வைக்கிறார்கள்.

விழாவில் காஞ்சி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.எஸ்.கதிரவன் நன்றி உரையாற்றுகிறார்.

மேலும் இந்த போட்டிகளை ஒருங்கிணைக்கும் டி.ஜசன் ராஜா,ஸ்கை மார்ட்டில் ஆர்ட்ஸ் ப்ரெசிடெண்ட், எம்.திரவியம், ஸ்கை மார்ட்டில் ஆர்ட்ஸ் செகிரேட்டரி, எம்.முருகன், செயிர்மன், ஒப் சவுத் இந்தியன் கெயுரியு கராத்தே பெட்ரேஷன் மற்றும் காஞ்சி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் க.வரதராஜ பெருமாள், இரா.விஜய சங்கர், டி. செங்குட்டுவன், ஓ.இ.பிரபாகரன், எஸ்.விக்னேஷ்,ஆர். அன்பு எழில், சாய் பிரசாந்த் கலந்து கொள்கிறார்கள்.

மேலும் வெற்றி பெற மாணவர்களுக்கு கழக மாநில பொறியாளர் அணி சார்பில் சைக்கிள்கள், சான்றிதழ், நினைவு பரிசுகள் வழங்கப்படுகிறது. இந்த விழாவில் கழக அனைத்து நிர்வாகிகளும் பங்கேற்கிறார்கள்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

# எழும்பூர் 99வது வட்டத்தில் அன்னம் தரும் அமுதக்கரங்கள்!

## சொ.வேலு முன்னிலை! ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை!

சென்னை, பிப்.1-

தமிழ்நாடு முதலமைச்சர் -கழகத் தலைவர் - திராவிட மாடல் நாயகர் அன்புத் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 99வது வட்டத்தில் இன்று (01.02.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணியளவில் புரசை வாக்கம் சண்முகராயன்தெரு பொன்னன்தெரு சந்திப்பில் அன்னம் தரும் அமுதக்கரங்கள் நிகழ்ச்சி யில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவர் - சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு காலை சிற்றுண்டி உணவு வழங்கி தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சி 99வது வட்டக் கழகச் செயலாளர் ஆர். எம். ரங்கநாதன் தலைமையில் பகுதிச் செயலாளர் சொ. வேலு முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே இந்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி 99வது வட்டத்திற்குட்பட்ட மாவட்டகழக, பகுதி கழக, வட்டகழக, நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி நிலை உறுப்பினர்கள் (BLC3), கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், மகளிர் அணி இளைஞர் அணி உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு 99வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி 14வது மற்றும் 15வது வார்டுகளில் ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட அங்கன்வாடி மையங்களை மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அப்பொழுது மாமன்ற உறுப்பினர்கள் டி.வி. ராஜா ,மங்கையர் திலகம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், பகுதி கழகத் துணைச் செயலாளர் வ.முத்து, வட்டக் கழகச் செயலாளர் பி.ராஜ்குமார் வட்டக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.தமீம்

**பிப்ரவரி 1 (2022)**



இளம்வயதிலேயே கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் வட்ட பிரதிநிதி, நகர துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1984ஆம் ஆண்டு நடைபெற்ற புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்து வைத்தவர்.

1996ல் கோவை மாநகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்று, மாநகராட்சி பணி நியமனக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தி.மு.க. நெசவாளர் அணி

# திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எ.என். சம்பத் அவர்களுக்குப் பதிலாக **எம்.எஸ். செல்வபாண்டியன்** (3, புதிய காஞ்சிபுரம் சாலை, ஏ.எஸ். நகர், செய்யாறு - 604407, திருவண்ணாமலை மாவட்டம்) அவர்கள் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31-01-2026.

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்,
தி.மு.க. நெசவாளர் அணி

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மதுரை மாநகர் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு மதுரை மாநகர் மாவட்ட தொகுதி மறுசீரமைக்கப்பட்டதால், ஏற்கனவே மதுரை மாநகர் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட வரதராஜன், கருணாநிதி, திருமாறன், காமாட்சி, கார்த்திகேயன் ஆகியோருக்கு பதிலாக, **கே. வினோத்குமார்** (8, அன்சாரி நகர் 2வது குறுக்குத் தெரு, மகபூப்பாளையம், மதுரை.), **எஸ். வேல்முருகன்** (3, இளந்தோப்பு 3வது தெரு, கரிமேடு, மதுரை.), **கே. சவரிராயன்** (1, பர்மா காலனி 3வது தெரு, கோ.புதூர், மதுரை.), **கே. பிரபாகரன்** (சி3/1, ஹவுசிங் போர்டு காலனி, ஞானஒளிவுபுரம், மதுரை.) **ஆர். பாலமுருகன்** (2/43, விசுவாசபுரி 2வது தெரு, ஞானஒளிவுபுரம், மதுரை.) மேலும், **ஜெ. சதீஸ் சரவணன்** (32/21, குலமங்கலம் மெயின் ரோடு, செல்லூர், மதுரை - 625002), **வி.சந்திரன்** (262, காந்திபுரம் 4வது தெரு, கோ. புதூர், மதுரை - 6250074) ஆகியோர் மதுரை மாநகர் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாகவும், **எம்.செந்தில்குமார்** (21, மணவாளன் நகர், குலமங்கலம் மெயின் ரோடு, செல்லூர், மதுரை - 625002) அவர்கள் துணைத் தலைவராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31-01-2026.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந. மணிமொழியன்

**பிப்ரவரி 1 (1991)**



பள்ளிப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

நாமக்கல் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை பொறுப்பு வகித்தவர்

தலைமைக் கழகச் சொற்பொழிவாளராக பணியாற்றி கழகத்தின் கொள்கைகளை மாநிலம் முழுவதும் பரப்பியவர்.

நாமக்கல் நகர கூட்டுறவு வங்கித் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

'மணிமொழியனிடம் மணி(பணம்) குறைவாக இருந்தாலும், நல்ல மொழி உள்ளது' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு, இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**